(1)	(2)	(3)	(4)
43. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	31,10,02	4,14,90	-
44. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி-பண்பாடு	14	-	-
45. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை	3	46,40	-
46. போக்குவரத்துத் துறை	30,36,32	-	-
47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	7	76,00	
48. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்	12	-	-
49. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	395,40,40	-	-
பெரு மொத்தம்	1,242,13,92	1,443,14,10	4,55,22,86

முற்பகல் 11-35

6. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2003-2004* ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

"In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamilnadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the Financial Year 2003-2004."

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-2004 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 13-2-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.